TNTP010077742024

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் திருச்சிராப்பள்ளி**

**பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி**

முன்னிலை : திரு.**P.சுவாமிநாதன், M.L.,**
முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, (PCR),
திருச்சிராப்பள்ளி

2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 4ம் நாள் வியாழக் கிழமை
**சிறப்பு அமர்வு வழக்கு எண்.48/2024**

**அரசுக்காக :-**
காவல் துணை கண்காணிப்பாளர் ....குற்ற முறையிடுபவர்
இலால்குடி உட்கோட்டம்
இலால்குடி காவல் நிலையக் குற்ற
எண்.266/2021

/எதிராக/

1. வீரமணி,
த/பெ கோபால்,
2. அண்ணாதுரை,
த/பெ கோபால்,
3. வினித்குமார்,
த/பெ வீரமணி
4. ஜெயக்குமார், ....எதிரிகள்
த/பெ சாரங்கபாணி
5. நிதிஷ்குமார்,
த/பெ ஜெயக்குமார்
கள்ளர் தெரு,
ஜங்கமராஜபுரம், அன்பில்,
இலால்குடி வட்டம்.

**எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள்**

| | |
|---|---|
| முதலாவதாக | கடந்த 11.03.2021 தேதி காலை 9 மணியளில் எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதியின் வீட்டுக்குள் புகுந்து அவரைப் பார்த்து பள்ள தேவடியாவுக்கு என்னடி சாமி போட்டு அடிக்குது என்று நிகழ்நிலை புகார்தாரரை **பொதுஇடத்தில் அசிங்கமாகத் திட்டிய குற்றத்திற்காக** சட்டப் பிரிவு **294(b)** இதச –ன் கீழ் தண்டிப்பதற்குரியது. |
| இரண்டாவதாக | மேற்படி தேதி, மணி, இடத்தில் எதிரிகள் அனைவரும் வேண்டுமென்றே நிகழ்நிலை புகார்தாரரை பட்டியலினச் சாதி பெயரைச் சொல்லி **பொதுப்பார்வையில், பொதுஇடத்தில் அவமானப்படுத்து**ம் நோக்கத்தில் திட்டிய செயல் சட்டப்பிரிவு **3(1)(r) of SC/ST(POA) Act 1989** ன் கீழ் தண்டிப்பதற்குரியது. |
| மூன்றாவதாக | மேற்படி தேதி, மணி, இடத்தில் எதிரிகள் அனைவரும் புகார்தாரரை சாதிப் பெயரைச் சொல்லி அசிங்கமாக இழிவுபடுத்தியுள்ளதாகவும், எனவே, **சாதிப் பெயரைச் சொல்லி திட்டி இழிவாகப் பேசி அவமானப்படுத்தியதன் மூலம்** சட்டப்பிரிவு **3(1)(s) of SC/ST(POA) Act 1989** ன் கீழ் தண்டிப்பதற்குரியது. |
| நான்காவதாக | மேற்படி தேதி, மணி, இடத்தில் எதிரிகள் அனைவரும் புகார்தாரரைப் பார்த்து பள்ளத் தேவடியாவுக்கு என்னடி சாமி போட்டு அடிக்குது உங்களை எல்லாம் உசுரோடு விடுவது தப்புடி என்று அனைவரும் கொலை மிரட்டல் விடுத்தும், முதல் எதிரி அருவாளால் வெட்டவந்ததால் உயிருக்கு பயந்து தனது மகன்களை அழைத்துச் சென்றதாகவும், எனவே, குற்றமுறு **கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக சட்டப்பிரிவு 506(ii) இதச உ/இ பிரிவு 3(2)(va) SC/ST(POA) Act 1989** ன் கீழ் தண்டிப்பதற்குரியது. |
| ஐந்தாவதாக | மேற்படி தேதி, மணி, இடத்தில் 4ம் எதிரி தன் கையில் வைத்திருந்த கட்டானால் புகார்தாரரை அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், நிகழ்நிலை புகார்தாரரை **கட்டானால் தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்திய 4ம்எதிரி பிரிவு 324 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST of POA Act 1989** ன் கீழ் தண்டிப்பதற்குரியது. |
| ஆறாவதாக | மேற்படி தேதி, மணி, இடத்தில் 4ம் எதிரி தன் கையில் வைத்திருந்த கட்டானால் புகார்தாரரை அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியதற்கு 1 முதல் 3 மற்றும் 5ம் எதிரி பொது எண்ணத்தை நிறைவேற்றும் எண்ணத்துடன் உடனிருந்த **குற்றத்திற்காக சட்டப்பிரிவு 324 இதச உ/இ 149 இதச உ/இ பிரிவு** 3(2)(va) SC/ST(POA) Act 1989 ன் கீழ் தண்டிப்பதற்குரியது. |
| ஏழாவதாக | மேற்படி தேதி, மணி, இடத்தில் எதிரிகள் அனைவரும் குற்றம் செய்யும் நோக்குடன் கையில் இரும்பு கம்பு, உருட்டு கட்டை, வீச்சு அருவாளுடன் ஒன்றுகூடியுள்ளதாகவும், எனவே, **ஆயுதங்களுடன் கலகம் செய்யும் நோக்குடன் ஒன்றுகூடிய குற்றத்திற்காக சட்டப்பிரிவு 148 இதச உ/இ பிரிவு** 3(2)(va) SC/ST(POA) Act 1989 ன் கீழ் தண்டிப்பதற்குரியது. |

| | |
|---|---|
| எட்டாவதாக | மேற்படி தேதியில், மேற்படி குற்றச் செயலில் தொடர்ச்சியாக எதிரிகள் அனைவரும் ஒரு பெண் என்று பாராமல் பொதுஇடத்தில் நிகழ்நிலை புகார்தாரரை துன்புறுத்தியுள்ள செயல் பிரிவு **4 of TNPHW Act** ன் கீழ் தண்டிப்பதற்குரியது. |
| ஒன்பதாவதாக | மேற்படி தேதியில், மேற்படி குற்றச் செயலில் தொடர்ச்சியாக எதிரிகள் அனைவரும் நிகழ்நிலை புகார்தாரரின் **வீட்டிற்குள் குற்றம் செய்யும் நோக்குடன் அத்துமீறி நுழைந்த குற்றத்திற்காக சட்டப்பிரிவு 448 of இதச** ன் கீழ் தண்டிப்பதற்குரியது. |
| எதிரிகளின் பதிலுரை | |
| எதிரிகள் | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு | |
| எதிரிகள் | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் தீர்ப்புரை | **முடிவாக, 1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் பிரிவுகள் 294(b), 448 இதச, பிரிவு 148 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவு 506(ii) இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவுகள் 3(1)(r) of SC/ST Act, 3(1)(s) of SC/ST of POA Act 1989, 4 of TNPHW Act, மற்றும் பிரிவு 324 இதச உ/இ பிரிவு 149 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989–ன் படியும், 4ம் எதிரி பிரிவு 294(b), 448 இதச, பிரிவு 148 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவு 506(ii) இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவுகள் 3(1)(r) of SC/ST Act, 3(1)(s) of SC/ST of POA Act 1989, 4 of TNPHW Act, மற்றும் பிரிவு 324 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989 குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 235(1) கு.வி.மு.ச. ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 21.05.2026 இறுதியாக விசாரணைக்காக வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞர் திருவாளர்.கே.பி.சக்திவேல் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.T.சேதுராஜன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களை ஆய்வு செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

## இலால்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளரால் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்

இவ்வழக்கின் புகார்தாரர் நாகஜோதி வயது 36, க/பெ. மணியரசன் என்பவர் திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டம், கீழஅன்பில், ஜங்கமராஜபுரம், வடக்குத் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், அவர் இந்து, பள்ளன் (SC) சாதியைச் சேர்ந்தவர் என்றும், இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டம், கீழஅன்பில், ஜங்கமராஜபுரம், கள்ளர் தெருவில் வசித்து வருகிறார்கள் என்றும், எதிரிகள் அனைவரும் இந்து–கள்ளன் (BC) சாதியைச் சேர்ந்தவர்கள் என்றும், கடந்த 11.03.2021ம் தேதி காலை 09.00 மணியளவில், நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதி அவரது வீட்டில் இருந்த போது எதிரிகள் கையில் இரும்பு கம்பு, உருட்டு கட்டை, வீச்சு அருவாளுடன் நிகழ்நிலை புகார்தாரரின் வீட்டுக்குள் புகுந்து நிகழ்நிலை புகார்தாரரைப் பார்த்து பள்ளத் தேவடியாவுக்கு என்னடி சாமி போட்டு அடிக்குது, உங்களை எல்லாம் உசுரோடு விடுவது தப்புடி என்று அனைவரும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், 4ம் எதிரி தன் கையில் வைத்திருந்த கட்டானால் நிகழ்நிலை புகார்தாரரை அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவும், அப்போது முதல் எதிரி வீரமணி தன் கையில் வைத்திருந்த அருவாளால் புகார்தாரரை வெட்ட முயன்றுள்ள குற்றத்தைப் புரித்துள்ளதாகவும். எனவே, எதிரிகளின் செய்கையானது பிரிவுகள் 147, 148, 448, 294(b), 323, 506(ii) இதச மற்றும் பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of POA SC/ST Act 1989 ன் படியும், பிரிவு 4 of TNPHW Act ன் கீழ்

தண்டிக்கத்தக்க குற்றம் என இலால்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு **08.11.2024** அன்று சிறப்பு அமர்வு வழக்கு எண்.48/2024 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச.பிரிவு 207 ன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

3) இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும், இருதரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்த வகையிலும், எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரங்கள் இருப்பதாகத் தெரிய வந்ததால், **1 முதல் 3 மற்றும் 5 எதிரிகளிடம்**, பிரிவுகள் 294(b), 448 இதச, பிரிவு 148 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவு 506(ii) இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவுகள் 3(1)(r) of SC/ST Act, 3(1)(s) of SC/ST of POA Act 1989, 4 of TNPHW Act, மற்றும் பிரிவு 324 இதச உ/இ பிரிவு 149 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989–ன் படியும், **4ம் எதிரியிடம்** – பிரிவுகள் 294(b), 448 இதச, பிரிவு 148 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவு 506(ii) இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவுகள் 3(1)(r) of SC/ST Act, 3(1)(s) of SC/ST of POA Act 1989, 4 of TNPHW Act, மற்றும் பிரிவு 324 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989 கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக் கூறி, எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து, தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறியதால், இவ்வழக்கானது அரசுத் தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசுத் தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 11 வரை குறியிடப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியிடப்படவில்லை.

**5) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் வாயிலாக தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்**

5.1) அ.சா.1.நாகஜோதி, ஜங்கம்மராஜபுரத்தில் குடியிருந்து வருகிறார். இந்து, பள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர் ஆவார். அவர்கள் ஊரில் பிரச்சனை நடந்தபோது அ.சா.1.நாகஜோதியிடம் கிராமத்தில் உள்ளவர்கள் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள். புகார் மனுவில் உள்ள கையொப்பம் **அ.த.சா.ஆ.1** ஆகும். கும்பலில் வந்தவர்கள் தாக்கியதில் அ.சா.1க்கு காயம் ஏற்பட்டது.

5.2) அ.சா.2.மணியரசன் அ.சா.1.நாகஜோதியின் கணவர் ஆவார், 2, 3 வருடங்களுக்கு முன்பு ஆச்சிராமவள்ளி அம்மன் கோவிலில் பிரச்சனை நடந்தபோது ஊரில் சண்டை என்று சொன்னார்கள். அப்போது கும்பலில் வந்தவர்கள் தாக்கியதில் அ.சா.1க்கு காயம் ஏற்பட்டு ஆம்புலன்சில் சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தார்கள்.

5.3) அ.சா.3.ருக்மணி, அ.சா.4.கௌசல்யா, அ.சா.5.நதியா, ஆகியோர் ஜங்கமராஜபுரத்தில் வசிக்கிறார்கள். கடந்த 5, 6 வருடத்திற்கு முன்பாக ஆச்சிராமவள்ளி கோவில் திருவிழாவிற்கு சாமி ஊர்வலம் வந்தது. அவர்கள் தெருவிற்கு சாமி வரக்கூடாது என்று ஒரே அடிதடியாக இருந்தது. கும்பலில் இருந்தவர்கள் நாகஜோதியை அடித்துவிட்டார்கள். நாகஜோதி இலால்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்.

5.4) அ.சா6.அஜய்தங்கம், கடந்த 2021ம் வருடம் இலால்குடி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராகப் பணியில் இருந்தார். கடந்த 11.04.2021ம் தேதி இலால்குடி, காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.வினோத்குமார் அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுகா, அன்பில் கிராமம், ஜங்கமராஜபுரத்தைச் சேர்ந்த மணியரசன் மனைவி நாகஜோதி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று காவல் நிலையக் குற்ற எண்.266/2021, பிரிவுகள் 147, 148, 448, 323 இதச உ/இ 4 of TNPHW Act மற்றும் பிரிவுகள் 3(1)(r), 3(1)(s) of SC/ST(POA) Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். நாகஜோதி கொடுத்த புகார் மனு **அ.த.சா.ஆ.2** ஆகும். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆகும்.

5.5) இவ்வழக்கு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்கு என்பதால் புலன்விசாரணை அதிகாரியை நியமிக்கவேண்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலுடன் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No.20/SJ&HR/PROCEEDINGS/TRI/2021, நாள் 11.04.2021ன் படி காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அந்த செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.4** ஆகும்.

5.6) காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்த வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தினேஷ்குமார் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப்

பார்வையிட்டு சம்பவ இடத்தைக் குறிக்கக்கூடிய பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.5** ஆகும். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.6** ஆகும். சாட்சிகளைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5.7) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு சாதிச் சான்று மெய்தன்மைச் சான்று கேட்டு இலால்குடி வட்டாட்சியர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதிக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து சிகிச்சைக்கு அனுமதித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கிய இலால்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று **அ.த.சா.ஆ.7** ஆகும்.

5.8) பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.வினோத்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சீதாராமன் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு சாதிச் சான்று மெய்த்தன்மை சான்று கேட்டு இலால்குடி வட்டாட்சியரிடம் கேட்டபோது இலால்குடி வட்டாட்சியர் திருமதி.சித்ரா அவர்கள் வருவாய் ஆய்வாளரின் விசாரணை மற்றும் ஆவணங்கள் அடிப்படையில்

நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதி இந்து, பள்ளன் எனப்படும் பட்டியல் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், எதிரிகள் வீரமணி, அண்ணாதுரை, வினித்குமார், ஜெயகுமார், நிதிஷ்குமார் ஆகியோர்கள் இந்து, கள்ளன் எனப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும், சாதிச் சான்று மெய்த்தன்மை சான்று வழங்கினார். அந்த சாதிச் சான்று மெய்த் தன்மை சான்று **அ.த.சா.ஆ.8** ஆகும். பின்பு சாதிச் சான்று மெய்த்தன்மை சான்று வழங்கிய வட்டாட்சியர் திருமதி.சித்ரா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5.9) காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சீதாராமன் அவர்கள் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் மேற்படி வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No.39/FUR.PROCEEDINGS/SJ&HR/TRI/2022, நாள் 09.11.2022ன் படி மேற்படி வழக்கை அ.சா.6. புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அந்த செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.9** ஆகும்.

5.10) அ.சா.6.அஜய்தங்கம் வழக்கைத் தொடர்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்ட போது ஏற்கனவே புலன்விசாரணை செய்த அதிகாரி தயார் செய்து வைத்திருந்த மாதிரி வரைபடம், பார்வை மகஜரை ஒத்து இருந்ததால் தனியாக பார்வைமகசர், மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை. வழக்கின் மற்ற சாட்சிகளை விசாரணை செய்தபோது இவ்வழக்கின் முந்தைய புலன்விசாரணை அதிகாரிகளிடம் கூறிய விவரங்களையே கூறியதால் தனியாக வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை.

5.11) அ.சா.6.அஜய்தங்கம் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No.10/FUR.PROCEEDINGS/SJ&HR/TRI/2024, நாள் 28.03.2024ன் படி வழக்கை திரு.ரகுபதிராஜா புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அந்த செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.10** ஆகும்.

5.12) காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ரகுபதிராஜா அவர்கள் தொடர்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதியை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விசாரணையில் புகார்தாரர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என தெரிந்தும் அவர் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து சாதி பெயரைச் சொல்லி அசிங்கமாகத் திட்டி அடித்து கொலை மிரட்டல் செய்துள்ளது தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை பிரிவுகள் 147, 148, 448, 323 இதச உ/இ பிரிவு 4 of TNPHW Act மற்றும் பிரிவு 3(1)(r), 3(1)(s) of SC/ST(POA) Act–லிருந்து பிரிவுகள் 147, 148, 294(b), 323, 448, 506(ii) இதச மற்றும் பிரிவுகள் 3(1)(r), 3(1)(s),3(2)(va) of SC/ST(POA) Act உ/இ 4 of TNPHW Act –ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.11** ஆகும். வழக்கின் புலன்விசாரணையை முடித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்கள் முடிவுற்றதும், அதிலிருந்து தெரியவரும் எதிரிகளுக்கு எதிரான சாட்சியங்கள் குறித்து, எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய்சாட்சி,

பொய்வழக்கு என்று அவற்றை மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

7) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை, எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8) **பிரச்சனை :–**

அரசுத் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் அவர் தரப்பு வாதத்தின் போது, இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் நாகஜோதி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்றும், அ.சா.1.நாகஜோதி கொடுத்த புகாரில் சம்பவம் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் வாயிலாகத் தெளிவாக நிரூபிக்கப்பட்டு இருப்பதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை விதிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

9) எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் அவர் தரப்பு வாதத்தின் போது, அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை எனவும், நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1.நாகஜோதி கொடுத்த புகாருக்கு மாறுபட்டு, சாட்சியத்தில் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளித்துள்ளதாகவும், சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளும் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளித்துள்ளனர் எனவும், சம்பவம் குறித்தும் தெளிவாக அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியமளிக்கவில்லை எனவும், புலன்விசாரணை

அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றம் இழைத்ததாகத் தீர்மானிக்க இயலாது என்றும், அரசுத்தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யவேண்டுமென்று வாதிட்டார்.

10) அ.சா.1.நாகஜோதி தன் சாட்சியத்தில், தங்கள் ஊரில் பிரச்சனை நடந்ததாகவும், அப்போது தன்னிடம் கிராமத்தில் உள்ளவர்கள் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள் எனவும், கும்பலில் வந்தவர்கள் தாக்கியதில் தனக்குக் காயம் ஏற்பட்டதாகவும், காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தபோதும் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள் என்று தெரிவித்ததாகவும், வேறு எதுவும் தெரியாது, தன்னை எதிரிகள் சாதி பெயரைச் சொல்லி திட்டவில்லை எனவும், வழக்குப் பற்றி தெரியாது என அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

11) நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1.நாகஜோதியின் கணவரான அ.சா.2.மணியரசன் தன் சாட்சியத்தில், 2, 3 வருடங்களுக்கு முன்பு ஆச்சிராமவள்ளி அம்மன் கோவிலில் பிரச்சனை நடந்தபோது ஊரில் சண்டை என்று சொன்னார்கள் எனவும், அப்போது கும்பலில் வந்தவர்கள் தாக்கியதில் தன் மனைவிக்குக் காயம் ஏற்பட்டது எனவும், தன் மனைவியை ஆம்புலன்சில் சிகிச்சைக்குக் கொண்டு சேர்த்தார்கள் எனவும், வழக்குப் பற்றி தெரியாது என அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளனர்.

12) சம்பவத்தைக் கண்ணுற்றதாக அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.3.ருக்மணி, அ.சா.4.கௌசல்யா, மற்றும் அ.சா.5.நதியா, ஆகியோர் கடந்த 5, 6 வருடத்திற்கு முன்பாக ஆச்சிராமவள்ளி கோவில் திருவிழாவிற்கு சாமி ஊர்வலம்

வந்ததாகவும், தங்கள் தெருவிற்குச் சாமி வரக்கூடாது என்று ஒரே அடிதடியாக இருந்ததாகவும், கும்பலில் இருந்தவர்கள் நாகஜோதியை அடித்துவிட்டார்கள் எனவும், நாகஜோதி இலால்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் எனவும் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளனர்.

13) அ.சா.1.நாகஜோதி கொடுத்த புகார் அ.சா.ஆ.2ஐ பரிசீலிக்கையில்,

" 11.03.2021 காலை 9 மணியளவில் தனது மகன்களுடன் வீட்டில் இருந்தபோது திடீரென்று கள்ளர் தெருவைச் சேர்ந்த வீரமணி, அண்ணாதுரை வினோத்குமார் ஜெயக்குமார், நித்திஷ்குமார் ஆகிய ஐந்து நபர்களும் கையில் இரும்புகம்பி, உருட்டுக்கட்டை, வீச்சரிவாளுடன் வீட்டிற்குள் புகுந்து பள்ள தேவடியாளுக்கு என்னடி சாமிபோட்டு அடிக்குது, உங்களையெல்லாம் உயிரோடு விடுறதே தப்புடி என்றபடி ஜெயக்குமார் கட்டானால் அடித்தார் அப்போது அருவாளை எடுத்து வீரமணி வெட்டவந்தார் என்றும், அதனால் உயிருக்கு பயந்து தன் மகன்களை அழைத்துக்கொண்டு வயல்காட்டில் ஓடி ஒழிந்து கொண்டதாக "

குறிப்பிட்டுள்ளது தெரிய வருகிறது. அ.சா.ஆ.2.புகாரில் எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரரின் வீட்டிற்குள் ஆயுதங்களுடன் அத்துமீறி புகுந்து சாதிப்பெயரைச் சொல்லி இழிவாகப் பேசியதாகவும், பெண் என்றும் பாராமல் வன்கொடுமை செய்து துன்புறுத்தி, குற்றமுறு கொலைமிரட்டல் விடுத்ததாகக் குறிப்பிட்டுள்ள நிலையில், நிகழ்நிலை புகார்தாரர் தான் கொடுத்த புகாருக்கு முரணாக கும்பலில் வந்தவர்கள் தாக்கியதாக சாட்சியமளித்துள்ளதும், அ.சா.ஆ.2. புகாரில், எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரரின்

வீட்டிற்குள் சென்றபோது, அ.சா.2 முதல் அ.சா.6 வரையானவர்கள் உடனிருந்ததாகவோ, சம்பவத்தைக் கண்ணுற்றதாகவோ குறிப்பிடாததும், சம்பவத்தின்போது தன்னுடன் மகன்கள் இருந்ததாகப் புகாரில் குறிப்பிட்டுள்ள நிலையில் அவர்களை சாட்சியாகச் சேர்த்து அரசுத்தரப்பில் விசாரிக்காததும் அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

14) மேலும், அ.சா.ஆ.7.விபத்து பதிவேடு நகலை பரிசீலிக்கையில், தெரிந்த மூன்று நபர்கள் கட்டானால் தாக்கியதாக அ.சா.1.நாகஜோதி மருத்துவரிடம் தெரிவித்துள்ள நிலையில் எதிரிகள் பயன்படுத்தியதாகச் சொல்லப்படும் ஆயுதங்கள் எதையும் அரசுத்தரப்பில் கைப்பற்றப்படாததும், அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

15) மேலும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட நிகழ்நிலை புகார்தாரரும் மற்றும் சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளும் எதிரிகளின் மீதான குற்றத்தை நிரூபிக்கும் வகையில் சம்பவம் குறித்து தெளிவுபட சாட்சியமளிக்காத நிலையில், புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகளின் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்ய இயலாது.

16) எனவே, மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும், இவ்வழக்கு எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக, 1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் பிரிவுகள் 294(b), 448 இதச, பிரிவு 148 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவு 506(ii) இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவுகள் 3(1)(r) of SC/ST Act, 3(1)(s) of SC/ST of POA Act 1989, 4 of TNPHW Act, மற்றும் பிரிவு 324 இதச உ/இ பிரிவு 149 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989–ன் படியும், 4ம் எதிரி பிரிவு 294(b), 448 இதச, பிரிவு 148 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவு 506(ii) இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989, பிரிவுகள் 3(1)(r) of SC/ST Act, 3(1)(s) of SC/ST of POA Act 1989, 4 of TNPHW Act, மற்றும் பிரிவு 324 இதச உ/இ பிரிவு 3(2)(va) of SC/ST POA Act 1989 குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 235(1) கு.வி.மு.ச. ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு மொழி வடிவில் சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 4 ம் நாள் திறந்த நீதிமன்ற அவையில் அவையறிய பகரப்பட்டது.

PERUMAL SWAMINATHAN

Digitally signed by PERUMAL SWAMINATHAN
Date: 2026.06.04 14:36:59 +0530

**முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**அரசுத் தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா. 1. | திருமதி.நாகஜோதி |
| அ.சா.2. | திரு.மணியரசன் |
| அ.சா.3. | திருமதி.ருக்மணி |

| | |
|---|---|
| அ.சா.4. | திருமதி.கௌசல்யா |
| அ.சா.5. | திருமதி.நதியா |
| அ.சா.6. | திரு.அஜய்தங்கம், காவல் துணை கண்காணிப்பாளர் |

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்=</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1. | புகார்மனுவில் அ.சா.1.ன் கையெழுத்து மட்டும் |
| அ.சா.ஆ.2. | புகார்மனு |
| அ.சா.ஆ.3. | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4. | காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை |
| அ.சா.ஆ.5. | பார்வைமகசர் |
| அ.சா.ஆ.6. | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.7. | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.8. | சாதிச்சான்று மெய்த்தன்மை சான்று |
| அ.சா.ஆ.9. | காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை |
| அ.சா.ஆ.10. | காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை |
| அ.சா.ஆ.11 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u> = இல்லை**

**<u>எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>** – இல்லை

**<u>அரசுத் தரப்பு சான்றுப் பொருள்</u> : இல்லை**

PERUMAL SWAMINATHAN

Digitally signed by PERUMAL SWAMINATHAN
Date: 2026.06.04 14:37:06 +0530

**முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர்(வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**